**உரிமைக் காப்புறுதி நிதியம் - 2013**

---

உரிமைக் காப்புறுதி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1998 இன் 21 ஆம் இலக்க உரிமைகளைப் பதிவு செய்தலுக்கான அதிகாரச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் பிரகாரம் பிறப்பிக்கப்படுகின்ற கட்டளைகளின் 41 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை உரிமைக் காப்புறுதி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 4,054,626 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,470,006 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 1,584,620 தொகையான அதிகரிப்பினைக் காண்பித்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது மீளாய்வாண்டில் உரிமைகளைப் பதிவு செய்தல் வருமானம் ரூபா 1,191,741 இனாலும் முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 379,431 இனாலும் அதிகரித்தமை மிகையின் அதிகரிப்பிற்கான பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 நிதியத்தின் செயற்படுதன்மை

(அ) 1998 இன் 21 ஆம் இலக்க உரிமைகளைப் பதிவு செய்தலுக்கான அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் காணிகளைப் பதிவு செய்யும் போது ஏற்படுகின்ற நட்டத்திற்காக இழப்பீட்டைச் செலுத்துவதற்கு இந்த நிதியம் 2010 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுகின்ற போதிலும் மீளாய்வாண்டு வரையிலும் அவ்வாறான இழப்பீடு செலுத்தப்படாமையின் மூலம் இது தொடர்பாக பொதுமக்கள் விளங்கியிருந்தமை நலிவான நிலையில் காணப்படுகின்றமையைக் காண்பித்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் போது நிதி நடவடிக்கையாக பதிவுக் கட்டண வருமானத்தில் 40 சதவீதம் மாதாந்தம் மாற்றப்பட்டு கணக்கு வைத்தல், உத்தியோகத்தர்களுக்கு படிகள் மற்றும் முகாமைத்துவ குழுக் கொடுப்பனவுகள் செலுத்துதல் என்பனவே கடந்த காலங்களில் நிதியத்தின் செயற்பாடாக இருந்தன. நிதியத்தின் வரையறுக்கப்பட்ட செயற்பொறுப்புக்கள் ஏனைய செயற்பாடுகளைப் போலவே கடமைக் கையளித்தல் மூலம் நிறைவேற்றக்கூடியதாக இருந்த போதும் பிரதான கணக்காளரை உள்ளடக்கிய 06 உத்தியோகத்தர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தில் 1/6 படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. கடந்த காலப்பகுதியின் போது அவ்வாறு செய்யப்பட்ட கொடுப்பனவுகளின் விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஆண்டு | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | செலுத்தப்பட்டதொகை |
|---|---|---|
| | | ரூபா |
| 2010 | 6 | 192,419 |
| 2011 | 6 | 280,388 |
| 2012 | 7 | 287,263 |
| 2013 | 9 | 286,848 |

(இ) உரிமைக் காப்புறுதி நிதியத்தின் வங்கி நடைமுறைக் கணக்கில் வருடம் முழுவதும் ரூபா 425,000 தொகைக்கு அதிகமான மீதி காணப்பட்டதுடன் நிதியத்தில் குறிப்பாக இனங்காணக்கூடிய தனித்தன்மைவாய்ந்த செலவின ஒழுங்குமுறைகள் காணப்படுகின்றமையினால் மிகையான பணத்தை நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு ஈடுபடுத்த முடியாதிருந்தமை நிதிமுகாமைத்துவத்தின் நலிவான நிலைமையைக் காண்பித்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட பெறுமதிகளுக்கும் உள்ளவாறான பெறுமதிகளுக்கிடையே 37 சதவீதம் தொடக்கம் 285 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது பயனுறுதியான ஒரு கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.